23rd November 1963]

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) The child, while being operated upon, died on 20th February 1963 due to cardiac arrest. Necessary intimation was sent to the Police, who held an inquest on the body on the same day and the body was handed over to the relatives. Subsequently on 21—3—1963, the father of the child complained about the death and wanted true copies of the hospital records connected with the case. The records being confidential, they could not be furnished to him. The Government are satisfied that the death was not due to negligence or want of professional skill.

திரு. எம். எஸ். மணி: ஸார், இந்தக் குழந்தை நாற்காலியில் இருந்து விழுந்ததனால் எலும்பு முறிந்து விட்டதா என்பதை எக்ஸ்ரே எடுத்துப் பார்ப்பதற்காக பொது மருத்துவ மனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கே போதுமான பயிற்சி இல்லாத டாக்டர் ஒருவர் அக்குழந்தையை 'அனிஸ்த்தீஷியா' என்ற மயக்க மருந்தை அதிகமாகக் கொடுத்து குழந்தை மூச்சு திணறும்படியாகச் செய்ததினால் தான் அந்தக் குழந்தை இறந்து விட்டது என்பது உண்மையா? இதுபற்றி சென்னையில் இருந்து வந்திருந்தபோது மந்திரி அவர்களிடம் சொன்னார்களே. அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : போதுமான பயிற்சி பெறாத டாக்டர் மருந்து கொடுத்தார் என்று சொல்லுவது தவறு. அவர் மிகவும் அனுபவமுள்ள டாக்டர் தான். பல ஆபரேஷன்களுக்கு கூட இருந்து உதவி வந்தவர். இந்த சம்பவம் நடக்கும் போது ஏ.டி.எம்.ஓ. அருகில் இருந்திருக்கிறார். அந்தக் குழந்தையை அழைத்துக் கொண்டு போனவுடன் எக்ஸ்ரே எடுத்து எலும்பு முறிந்து இருப்பதைக் கண்டுபிடித்து அதை ஒழுங்கு செய்வதற்காகவே ஆபரேஷன் தியேட்டருக்கு எடுத்துச் சென்றார்கள். தியேட்டரில் மயக்க மருந்து கொடுத்து ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்து பிராக்சரை செட் பண்ணின பிறகு தான் திடீரென்று 'கார்டியோக் பெயிலியூரினால்' குழந்தை இறந்ததே தவிர, போதுமான பயிற்சி இல்லாத டாக்டரின் தவறினால் இறந்தது என்று சொல்லுவது சரி அல்ல.

Kodambakkam over-bridge

* 501 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state the estimated cost for the construction of the Kodambakkam overbridge near Madras City?

THE HON. SRI V. RAMAIAH : The estimated cost of construction of approaches to the overbridge is Rs. 39 lakhs. This expenditure will be shared equally by the Government and the State

Housing Board. Apart from this, the Railways will be constructing at their cost the portion of the bridge structure within the railway limits, the cost of which is estimated at Rs. 3.6 lakhs.

சென்னை நகரில் போக்குவரத்து நெருக்கடி

*502 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் போக்கு வரவு நெருக்கடியைத் தவிர்க்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?

(இ) சென்னை மவுண்ட் ரோடில் ஆறு வழிப் பாதை சரிவர இயங்கவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா?

(உ) இந்த முறைக்குப் பதில் வேறு எதும் புதுமுறை காணப்பட்டதா?

(எ) இதுபற்றி அரசாங்கம் புனராலோசனை செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A statement [a] is placed on the Table of the House.

(b) The six-lane system in Mount Road is functioning satisfactorily.

(c) & (d) Do not arise.

புதுக்கோட்டைப் பகுதியில் சுண்ணும்புப் படிவங்கள்

*503 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள ஆணைக்கோட்டையில் சுண்ணும்புக் கற்கள் கிடைப்பதால் அப் பகுதியில் தனியார்களுக்குக் கடனுகவோ அல்லது மானியமாகவோ பணம் கொடுத்து அத் தொழிலை அபிவிருத்தி செய்து அப் பகுதியில் சுண்ணும்புப் பற்றாக் குறையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : Applications for grant of mining lease or prospecting licence for limestone from the private sector are considered on merits in consultation with the Collectors of the Districts concerned and the Director of Industries and Commerce. Lime manufacturing industry is eligible for aid under the provision of the Madras State aid to Industries Act.

ஏரியைப் புதுப்பித்தல் (திருச்செங்கோடு வட்டம்)

*504 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பாப்பம்பாளையம் கிராமத்தில் உள்ள ஏரியைப் புதுப்பிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

---

[a] Printed as Appendix V on pages 781-785 infra.